12.03.2026 OS.No.204/2021

சாட்சி: PW1 நாராயணன் செட்டியார்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்திற்க்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் பிரதிவாதி பெயர் தெரியுமா என்றால் கமலம் ஆவார். வழக்கு தாக்கல் செய்த சொத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண். 34/1 பட்டா எண் பழையது 162, புதிய பட்டா எண்.464 ஆகும். சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும், மேற்கே இரயில்வே லைன் உள்ளது, கிழக்கே வேறு ஒரு நபரின் சொத்து உள்ளது, வடக்கே பிரதிவாதி கமலம் சொத்து வாங்கியதாக சொல்கிறார், தெற்கே கன்மாய் கரையில் இருந்து தொடர்ந்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.